# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 24.11.2025**

**OS No. : 34/2021**

**Dw : 1**

**Name : திரு. நீலமேக கண்ணன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

வாதி பாலமுருகனை எனக்கு கடந்த ஜனவரி 2020 லிருந்து தெரியும். அவர் செங்கமால் வைத்து தொழில் செய்துவருகிறார் என்றால் சரிதான், அதை தவிர எம்.சான்ட் தயாரிக்கும் தொழிலும் செய்துவருகிறார். அவரிடம் சுமார் 5 பேர் வேலை செய்கிறார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வெங்கடாம்பட்டி கிராமம் சர்வே எண். 731/1, 732/3 நிலங்கள் எனக்கு சொந்தமானவை என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நிலம் எனக்கு சொந்தமானது கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 புகார் என்று எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்ற விவரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தில் எந்த சர்வே நம்பர் குறித்து புகார் கொடுக்கப்பட்டது என்ற விவரம் துலங்காது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் பி.வா.சா-ஆ.1 ஆவணத்திற்கும் தொடர்பு கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 புகார் ஆவணம் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 சி.எஸ்.ஆர் அடிப்படையில் எங்களை விசாரித்து பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலம் அல்லது இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் போலீசார் எங்களை காவல்நிலையம் அழைத்து விசாரணை செய்தார்கள். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் போலீசார் வாதிக்கு ஆதரவாக செயல்பட்டுவந்தார்கள். வாதிக்கு ஆதரவாக

செயல்படுகிறார்கள் என்று நான் நீதிமன்றத்தில் தனிப்புகார் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்ததற்கு எந்தவித ஆதரவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதியிடம் பெற்ற கடனை திரும்ப கொடுக்கக்கூடாது என்பதற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 15.08.2020 ம் தேதியன்று நான் வாதியிடம் ரூ.10,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு வா.சா.ஆ. 1 ஆவணம் எழுதியும், அதில் கையொப்பமும் இட்டு கொடுத்துவிட்டு தற்போது அதிலிருந்து தப்புவதற்காக மேற்படி பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பெற்ற கடனை வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi